உ
சிவமயம்

அனலைதீவு
வீரகத்தி வள்ளியம்மை தம்பதிகளின்
அருமைப் புதல்வன்

# அமரர் செல்வன் நடேசன்
(சித்தப்பா)
அவர்களது

பிரிவு குறித்த

# நினைவு மலர்

30-09-1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அன்பே சிவம்



## திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவார்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்வன் வீரகத்தி நடேசன் (ஈசன்)



அன்னை மடியில்:
18-01-1966

ஆண்டவன் அடியில்:
17-08-1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வளம்

அனலைதீவு நீர்வளம், நிலவளம் பொருந்திய கிராமம். அதன் தென்பால் உள்ள கிராமத்திலே நடேசப் பெருமான் கோயில்கொண்டருள்கிருர். வடபுறம் சிவனும் தென்புறம் சக்தியும் (நயினுதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்) அமைந் திருப்பது அவ்வூரின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக வுள்ளது.

அமரர் வீரகத்தி, வள்ளியம்மை தம்பதிகள் நடேசப் பெருமானைக் குலதெய்வமாக வழிபட்டு ஆராதனை செய்து வந்தார்கள். அவர்களுக்கு ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தி ஆறும் ஆண்டு தைத் திங்கள் பதினெட்டாம் திகதி அமரர் செல்வன் நடேசன் அவதரித்தார். பெற்றேர் தம் குலதெய்வத்தின் பெயராகிய நடேசன் என்ற நாமத்தையே குழந்தைக்கும் சூட்டினர்.

சிறு பராயத்திலிருந்தே புத்திக் கூர்மையும் சிறந்த அறிவாற்றலும் படைத்த குழந்தையாகப் பரிணமித்தமை எங்களை மிகவும் கவர்ந்தது. குழந்தைப் பருவத்திலிருந்தே பேத்தியாருடனும் மாமாமாருடனும் சித்திமாருடனும் வாழ்ந்துவந்தார். ஆரம்பக் கல்வியை அனலைதீவு தெற்கு கனிஷ்ட பாடசாலையில் கற்ருர். பின்னர் இடைநிலைக் கல்வியைக் கொழும்பு உவெஸ்லிக் கல்லூரியிலும், தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரியிலும் பயின்ருர். கல்லூரியில் படிக்கும் காலத்திலே ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற் றும், நண்பர்களின் பெரும் உறவுகளையும் வளர்த்தார். அவரது ஆசிரியர்களும் நண்பர்களும் அவரைச் 'சித்தப்பா' என்று அன்போடு அழைத்துவந்தார்கள்.

எல்லோருடனும் அன்பாகப் பழகுவதிலும் யாருக்கும் வேண்டிய உதவிகள் புரிவதிலும் அவருக்கு இருந்த ஆர்வம் எதிர்காலத்தில் தம்மினத்தின் வீரனுவான் போலிருந்தது. சிறுவயதிலேயே உயர்ந்த பதவிகளை வகித்துப் பேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழும் எய்தியவர். தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தம்மினத்திற்காக ஈந்தார். ஆனல் இவைகளை ஆண்டவன் பொறுக்கவில்லைப் போலும்.

பாலசுப்பிரமணியம், யோகராணி, ரஞ்சினிதேவி, செல்வராசா, புஸ்பராணி, சிறீதரன், குகராணி ஆகியோர் அவரது உடன் பிறப்புக்களாவர். சிவப்பிரகாசம் ஜெகசோதியின் அன்பு மைத்துனர். நாகமுத்து சுப்பிரமணியம், வையாபுரி மஹேன்மணி ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார். தம்பையா மீனுட்சி, பேரம்பலம் கமலகுமாரி, திருச்செல்வம் தனலெட்சுமி ஆகியோரின் மருகரும், பேரம்பலம் சிவக்கொழுந்து, சோமசுந்தரம் கண்மணி, குமாரசுவாமி ஈஸ்வரி, அமரசிகாமணி சிவகாமிப்பிள்ளை, செல்வி வை. அன்னலட்சுமி ஆகியோரின் பெருமகனும் ஆவார்.

இவ்வளவு பலத்த உறவுகளை உதறித் தள்ளி எறிந்து விட்டுப் புறப்பட்டான் வீரமகன். தம்மின மண்ணுக்காகப் பெற்ருேர், உடன்பிறந்தார் அனைவரையும் இழந்து சென்ற அந்த வீரமகனுக்கு அப்படியான ஒருநிலை வந்தது அதிர்ச்சிக்குரிய விஷயம். எதிர்பாராத விதமாக நேர்ந்த இந்தச் சம்பவம் கேள்வியுற்ருேம். அதிர்ச்சி அடைந்தோம். தம்மினத்துக்காகத் தன்னுயிரை இழந்த அந்தத் தியாகியின் ஆத்மா மீண்டும் ஒருமுறை வந்து தம்மினத்தின் விடிவு காண உழைக்கும் என்ற அந்த அசையாத நம்பிக்கை வீண்போகாது.

வீர இரத்தம் சிந்திய அதே மண்ணில் வீரமகன் பிறந்து தமது நீதியை நிலைநாட்டுவான். எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் புரிவாராக.

"ஒரு பொல்லாப்பும் இல்லை"
"எப்பவோ முடிந்த காரியம்" — *ஸ்ரீ யோகர் சுவாமிகள்*

இவ்வளவு இளம் வயதினிலேயே எங்களை விட்டுப் பிரிந்த அந்த அன்பான ஆத்மா ஆண்டவனிடத்தில் அமைதி பெற எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகின்ருேம். சுபம்.

*அனலைதீவு.* இங்ஙனம்,
*30-09-1985.* அம்மா, சகோதரர்கள், மைத்துனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத ஒளி விளக்கு

அமரர் செல்வன் வீ. நடேசன் (ஈசன்) எங்களது உடன் பிறப்பில் ஒருவர்தான், என்பதை நாங்கள் எப்படி மறப் போம். எங்களோடு பிறக்கவேண்டிய அதே பிறவி எம் அக்கா வயிற்றில் உதித்ததில் அதிசயமில்லை. ஆசையோடு வளர்ந்த அந்த அறிவுக் கடல் இன்று இல்லை. அன்போடு வளர்த்த அந்த ஆசை முகம் எங்கே? பாசத்தோடு வளர்த்த பண்பான உள்ளம் எங்கே? எல்லாம் திரைமறைவாகி விட்டது. நெஞ்சு நினைக்கும்போது எங்களை நாங்கள் மறந்து விடுகின்றோம்.

நாங்கள் ஈசன் என்று அழைக்கும்போது அவரில் ஈசனைக் காண்கின்றோம். அவரது எதிர்கால வாழ்வுக்கு நல்ல வித்திட்டுவந்தோம். ஆனல் பாதி வழியிலே தமது எண்ணப்படியே செயலாற்ற ஆரம்பித்தமை எங்களை மிகவும் மனம் புண்பட வைத்தது. ஆனலும் அவரது கொள்கை கள் பொதுநலமாக இருந்தபடியால் நாங்கள் எங்களைச் சாந்தப்படுத்திக் கொண்டோம். ஆனல் இவ்வளவு விரை வாக அந்த ஆத்மா பிரியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அவரது கொள்கை, விருப்பம், ஆசை எல்லாம் நசுக்கப் பட்டு ஒடுக்கப்பட்டு ஒழிக்கப்பட்டு விட்டதை எண்ணியே கலங்குகின்ரேம். ஆனலும் இன்னுமோர் உடலெடுத்து எம் மண்ணுக்காக உழைத்து வெற்றி பெறத் தியானிக்கிரேம்.

மீண்டும் ஒருமுறை வாழ நினை. அன்னரது ஆத்மா சாந்தி பெற நாங்கள் அன்போடு ஆராதிக்கிரேம்.

அனலைதீவு,
30 - 09 - 1985.

இங்ஙனம்,
அம்மம்மா, மாமாமார், சித்திமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரத் திரட்டு

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
வன்னநடைமட வாளுமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்கநெறி தந்தபித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
யற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின்மேலாஞ்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதியார் பாடல்கள்

### நடிப்புச் சுதேசிகள்

நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறமு மின்றி,
வஞ்சனை சொல்வா ரடீ! — கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி! 1

கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டத்திற் கொள்ளா ரடீ! — கிளியே!
நாளில் மறப்பா ரடீ! 2

சொந்த அரசும் புவிச் சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டா குமோ! — கிளியே!
அலிகளுக் கின்ப முண்டோ? 3

கண்கள் இரண்டி ருந்தும் காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்ட மடீ! — கிளியே!
பேசிப் பயனென் னடீ! 4

யந்திர சாலை யென்பர் எங்கள் துணிக ளென்பர்
மந்திரத் தாலே யெங்கும் — கிளியே!
மாங்கனி வீழ்வ துண்டோ? 5

உப்பென்றும் சீனி என்றும் உள்நாட்டுச் சேலை என்றும்
செப்பித் திரிவா ரடீ! — கிளியே!
செய்வ தறியா ரடீ! 6

தேவியர் மானம் என்றும் தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால்! — கிளியே! 7
நம்புத லற்று ரடீ!

மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயிரைக் — கிளியே! 8
பேணி யிருந்தா ரடீ!

தேவி கோயிலிற் சென்று தீமைகள் பிறர் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்! — கிளியே!
அஞ்சிக் கிடந்தா ரடீ! 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறு மதியும்
உச்சத்திற் கொண்டா ரடீ! — கிளியே!
ஊமைச் சனங்க ளடீ! 10

ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக் கோர் கணமும் — கிளியே!
வாழத் தகுதி யுண்டோ? 11

மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில் — கிளியே!
இருக்க நிலைமை யுண்டோ? 12

சிந்தையிற் கள்விரும்பிச் சிவசிவ வென்பது போல்,
வந்தே மாதர மென்பார்! — கிளியே!
மனதி லதனைக் கொள்ளார். 13

பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப்
பழமை இருந்த நிலை! — கிளியே!
பாமர ரேதறி வார்! 14

நாட்டில் அவ மதிப்பும் நாணின்றி இழி செல்வத்
தேட்டில் விருப்பங் கொண்டே! — கிளியே!
சிறுமை யடைவா ரடீ! 15

சொந்தச் சகோ தரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்,
சிந்தை இரங்கா ரடீ! — கிளியே!
செம்மை மறந்தா ரடீ! 16

பஞ்சத்தும் நோய்க ளிலும் பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தம் கண்ணுற் கண்டும்! — கிளியே!
சோம்பிக் கிடப்பா ரடீ! 17

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா! — கிளியே!
வந்தே மாதர மென்பார்! 18

## சுதந்திரப் பெருமை

"தில்லை வெளியிலே கலந்துவிட் டாலவர்
திரும்பியும் வருவாரோ?" என்னும் வர்ணமெட்டு

1. வீர சுதந்திரம் வேண்டிநின் றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? — என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ? (வீர)

2. புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல் — அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பாரோ? (வீர)

3. பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்
பெற்றியை அறிந்தாரேல் — மானம்
துறந்தறம் மறந்தும்பின் உயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ? (வீர)

4. மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல் — அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்பாடு மாறுளதோ? (வீர)

5. விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ? (வீர)

6. மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுல்
கைகொட்டிச் சிரியாரோ? (வீர)

7. வந்தே மாதரம் என்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ? (வீர)

## தமிழ்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை;
உண்மை,வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
 தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! 1

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
 தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
 தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
 சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
 அதைவணக்கஞ் செய்தல் வேண்டும். 2

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
 வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
 கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
 விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
 இங்கமரர் சிறப்புக் கண்டார். 3

## முருகா! முருகா!

**பல்லவி**

முருகா! — முருகா! — முருகா!

**சரணங்கள்**

1. வருவாய் மயில்மீ தினிலே
 வடிவே லுடனே வருவாய்!
 தருவாய் நலமும் தகவும் புகழும்
 தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

2. அடியார் பலரிங் குளரே;
 அவரை விடுவித் தருள்வாய்!
 முடியா மறையின் முடிவே! அசுரர்
 முடிவே கருதும் வடிவே லவனே! (முருகா)

3. சுருதிப் பொருளே, வருக!
 துணிவே, கனலே, வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா)

4. அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம் சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வே லவனே, சரணம்! (முருகா)

5. அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்! (முருகா)

6. குருவே! பரமன் மகனே!
குகையில் வளருங் கனலே!
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமரா திபனே! சரணம் சரணம்! (முருகா)

## கண்ண பெருமானே!

காயிலே புளிப்பதென்னே? கண்ண பெருமானே! — நீ
கனியிலே இனிப்பதென்னே? கண்ண பெருமானே!
நோயிலே படுப்பதென்னே? கண்ண பெருமானே! — நீ
நோன்பிலே உயிர்ப்பதென்னே? கண்ண பெருமானே! 1

காற்றிலே குளிர்ந்ததென்னே? கண்ண பெருமானே! — நீ
கனலிலே சுடுவதென்னே? கண்ண பெருமானே!
சேற்றிலே குழம்பலென்னே? கண்ண பெருமானே — நீ
திக்கிலே தெளிந்ததென்னே? கண்ண பெருமானே! 2

ஏற்றிநின்னைத் தொழுவதென்னே? கண்ண பெருமானே! — நீ
எளியர்தம்மைக் காப்பதென்னே? கண்ண பெருமானே!
போற்றிஞரைக் காப்பதென்னே? கண்ண பெருமானே! — நீ
பொய்யர்தம்மை மாய்ப்பதென்னே? கண்ண பெருமானே! 3

### வேறு

போற்றி! போற்றி! போற்றி! போற்றி!
கண்ணபெரு மானே! — நின்
பொன்னடியே போற்றி நின்றேன்,
கண்ணபெரு மானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நந்த லாலா

காக்கைச் சிறகினிலே நந்த லாலா !—நின்றன்
கரியநிறந் தோன்று தையே நந்த லாலா ! 1
பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா !—நின்றன்
பச்சைநிறந் தோன்று தையே நந்த லாலா ! 2
கேட்கு மொலியி லெல்லாம் நந்த லாலா—நின்றன்
கீத மிசைக்குதடா நந்த லாலா ! 3
தீக்குள் விரலை வைத்தால் நந்த லாலா — நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா நந்த லாலா! 4

## வெள்ளைத் தாமரை

1. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் ளொளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள். (வெள்ளைத்)

2. மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்;
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்;
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்;
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றால்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள். (வெள்ளைத்)

3. வஞ்ச மற்ற தொழில்புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்;
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்,
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம். (வெள்ளைத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்,
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்;
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்;
செய்வ மென்ருெரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்,
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம். (வெள்ளைத்)

5. செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்த னம்இவட் கேசெய்வ தென்ருல்
வாழி யஃதிங் கௌிதன்று கண்டீர்!
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை இடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை யன்ரும். (வெள்ளைத்)

6. வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி;
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர். (வெள்ளைத்)

7. ஊணர் தேசம் யவனர்தந் தேசம்
உதய ஞாயிற் ருெளிபெறு நாடு;
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவின் ஒளிமிகுந் தோங்க. (வெள்ளைத்)

8. ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்!
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான மற்று விலங்குக ளொப்ப
  மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா:
  புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்! (வெள்ளைத்)

9. இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
  இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
  ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
  பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
  ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல். (வெள்ளைத்)

10. நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்!
  நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
  ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
  வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
  இப்பெ ருந்தொழில் நாட்டுவம் வாரீர்! (வெள்ளைத்)

## கண்ணம்மா — என் காதலி

சுட்டும் விழிச்சுடர்தான், — கண்ணம்மா!
  சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி — கண்ணம்மா!
  வானக் கருமைகொல்லோ?
பட்டுக் கருநீலப் — புடைவை
  பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் — தெரியும்
  நக்ஷத் திரங்களடி! 1

சோலை மலரொளியோ — உனது
  சுந்தரப் புன்னகைதான்?
நீலக் கடலலையே — உனது
  நெஞ்சி லலைகளடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலக் குயிலோசை — உனது
  குரலினி னிமையடீ!
வாலைக் குமரியடீ, — கண்ணம்மா!
  மருவக் காதல்கொண்டேன். 2

சாத்திரம் பேசுகிறாய், — கண்ணம்மா!
  சாத்திர மேதுக்கடீ!
ஆத்திரங் கொண்டவர்க்கே, — கண்ணம்மா!
  சாத்திர முண்டோடீ!
மூத்தவர் சம்மதியில் — வதுவை
  முறைகள் பின்புசெய்வோம்;
காத்திருப் பேனோடீ? — இதுபார்,
  கன்னத்து முத்தமொன்று! 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள் அன்புச் செல்வத்தை இழந்து ஆருத் துய ருறும் எங்களுக்கு ஆறுதல் கூறிய அனைவர்க்கும், அவரது அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியம் ஆதிய வைபவங்களில் கலந்து உதவி புரிந்த எம் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேம்.

இங்ஙனம்,
திருமதி. வீரகத்தி வள்ளியம்மை,
சகோதரர்கள், மைத்துனர்,
அம்மம்மா, மாமாமார்

*அனலைதீவு,*
*30-09-1985.*



மஹாத்மா அச்சகம், ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org